IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 26 /2021
Deposition of witness for PW1

Name : மதியழகன்

Father Name : பாண்டுரங்கன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 day of October, 2023.

குறுக்கு விசாரணை

1. நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ2-ல் வழக்கு சொத்து சர்வே எண். 178/2இ-ல் 30 செண்ட்டில் 7 1/2 செண்ட் வாங்கியுள்ளதாக காட்டியுள்ள நிலையில் அந்த ஆவணத்தில் மேற்படி 7 1/2 செண்டில் நாற்புற எல்லைகள் பற்றி வா.சா.ஆ2-ல் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆனது சர்வே எண். 178/2 என்று மட்டுந்தான் குறிப்பிட்டு கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ1-ன் படி 4 செண்டிற்குத்தான் மேற்படி சர்வே எண். 178/2 குறிப்பிட்ட நாற்புற எல்லைகளுடன் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வாசா.ஆ1-ன் படி சர்வே எண். 178/2-ல் மொத்தம் 19 செண்ட் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ1-ன் படி கிரையம் பெற்றுள்ள சொத்துக்களுக்கும் மேலாக வா.சா.ஆ2-ன் படி சர்வே எண். 178/2டி-யில் 48 செண்டும், சர்வே எண். 178/2இ-ல் 7 1/2 செண்ட்டும் அதில் உள்ள கிணற்றில் 1/4-ல் ஒரு பாகமும் சேர்த்து வா.சா.ஆ2-ன் படி விற்க என்னுடைய விற்பனையாளருக்கு உரிமையே இல்லை என்றால் சரியல்ல சொத்து என்னுடையது தான். வா.சா.ஆ1-ன் படி சர்வே எண்.180/7-ல் மட்டுந்தான் கிணறு மற்றும் நிலம் உள்ளது என்றும் மற்ற சர்வே எண்களில் நிலம் மட்டுமே குறிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. நான் வழக்கு சொத்தை கிரையம் செய்வதற்கு முன்பு நிலத்தை அளந்தும் வில்லங்க சான்றிதழை சரிபார்த்தும் நான் வாங்கினேனா என்றால் சரிதான். அதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் கூறுவது

பொய் என்றும் அவ்வாறு எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பினை நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். வேலூர் மாவட்ட நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் நான் அளித்த புகார் மனுவை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. புகார் அளித்த பின்பு வழக்கு சொத்தை அளந்து பார்க்கவேண்டி சர்வேயரிடம் படி கட்டியதற்கான ஆதாரங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை அளக்காமலேயே நாங்கள் கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் நான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு ஆதரவாக போலீசார் மூலம் வா.சா.ஆ6-ஆவணம் தயார் செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் நான் தான் இருந்து வருகிறேன். வா.சா.ஆ-6-ல் சர்வே துறையில் இருந்து வழக்கு சொத்தை எந்த அதிகாரி அளந்தார் என்ற எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ6-ல் எந்த வருவாய் அதிகாரியால் வழக்கு சொத்தின் அடிப்படையில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தில் தான் நான் சுவாதீனத்தில் இருக்கிறேன் என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்றால் வட்டாட்சியர் அறிக்கை மற்றும் யூடி.ஆர்-யாரின் கீழ் நான் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். வட்டாட்சியர் அறிக்கை மற்றும் யூ.டி.ஆர்-யாரின் கீழ் நான் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்று ஏதேனும் வா.சா.ஆ6-ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. வா.சா.ஆ6-க்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ6-ல்போலி ஆவணம் தயார் செய்யப்படவில்லை என்பதாலும் உரிமையியல் சம்மந்தமாக இருப்பதால் போலீசார் நடவடிக்கையை கைவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2017 முதல் இவ்வழக்கை தாக்கல் செய்யும் வரை 4ம் பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் எந்த புகாரும் நான் அளிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் 178/2இ -யில் நான் முழுஉரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல.

7. இவ்வழக்கில் கிணற்றில் எனக்கு கால் பாக உரிமைபோக மீதமுள்ள 3 பாக உரிமையாளர்கள் யார் என்று என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 3 பாக உரிமையாளர்களை இவ்வழக்கில் அவசியதரப்பினராக நான் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(4ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.